DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF PREVENTION OF CORRUPTION ACT CASES, MADURAI.

**SPECIAL CASE No: 1/2020**

DEPOSITION OF WITNESS **P.W.1** FOR PROSECUTION

Name : திருமதி.கண்ணகி

Father's Name : Tr.ராமமூர்த்தி

Village : மதுரை

Taluk : மதுரை

Age :52

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the **19th day of January 2021.**

**முதல் விசாரணை:**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் தற்போது மதுரை மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில் தனித்துணை ஆட்சியராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன் மேலூர் வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றியபோது மதுரை ஊதக பிரிவு கு.எண்.15/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி திருமதி.மணிமேகலைக்கு எதிராக வழக்கு தொடர இசைவாணை கேட்டு மாவட்ட ஆட்சியர் மூலம் சென்னை ஊதக பிரிவு இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர் Roc.No.31632/2019/G1 dated 04.12.2019 கோப்பை பார்வையிட்டேன். திருமதி.மணிமேகலை சம்பவத்தின்போது மேலூர் தாலுகா கீரனூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வேப்படப்பு கிராமநிர்வாக அலுவலகத்தின் பொறுப்பு அதிகாரியாக பணியாற்றி வந்தார். நான் பார்வையிட்ட கோப்புடன் கு.எண்.15/2019 சம்மந்தப்பட்ட முதல்தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்கு மூலங்கள், எதிரியின் வாக்குமூலம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இருந்தது. அவைகளை நான் பரிசீலனை செய்தேன். மறுநாள் 05.12.2019-ம் தேதியன்று இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரி திரு.கண்ணன் ஆய்வாளர்

அவர்களை நேரில் அழைத்து அவரிடம் சாட்சிகளின் வாக்குமூலங்கள், இதர ஆவணங்களை கேட்டுப்பெற்று விவரம் தெரிந்து கொண்டேன். பகுப்பாய்வு அறிக்கையையும் என்னுடைய பரிசீலனைக்கு கொடுக்கப்பட்டது. அதையும் பார்வையிட்டேன். நான் அதை நன்கு படித்துப்பார்த்து மனநிறைவு பெற்று எதிரி மணிமேகலைக்கு எதிராக வழக்கு தொடர இசைவாணை வழங்கினேன். எனக்கு எதிரியை பணி நீக்கம் செய்ய அதிகாரம் உள்ளது. எனவே நான் தகுதியுள்ள அதிகாரி என்பதால் அந்த இசைவாணையை வழங்கினேன். நான் வழங்கிய இசைவாணை 06.12.2019 தேதியிட்டது அசாஆ1 ஆகும். அது Roc.No.2855/2019/A3 என்ற நடவடிக்கை எண்ணின் கீழ் வழங்கப்பட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் திரு.கண்ணன் விசாரணை செய்தார்.

**<u>2-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை. 2-ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.

**<u>1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1-ம் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை 22.01.2021-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.